# சமூக குற்றவியல் நீதிமன்றம்


> வழக்கு வகைகள்

> சமூக குற்றவியல் நீதிமன்ற கூட்டம்

> நிபுணத்துவ சேவைகளுக்கான மையம்

> சமூகம் சார்ந்த தண்டனை தெரிவுகள்

> சமூக வளங்கள்/முகமைகள்



# சமூக குற்றவியல் நீதிமன்றம்

*“பொதுமக்களின் நம்பிக்கையை அனுபவிக்கும் ஒரு நீதி முறையே, சமூகத்தின் தேவைகளை முறையாக கவனத்தில் கொள்ளும் ஒன்றாகும். அடிப்படை நீதிச் சீர்திருத்தங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளதால், சமூகத்தின் தேவைகளை வரவேற்று ஏற்க ஒரு நிபுணத்துவ நீதிமன்றத்தை நிறுவ இது சரியான நேரம். ஒரு புதிய சமூக நீதிமன்றம் நிறுவப்படும்.”*

— மாண்புமிகு தலைமை நீதிபதி சான் சேக் கியோங்
15 வது கீழ் நீதிமன்றங்கள் வேலைத்திட்டம், 18 மே 2006

ஒரு முழுமையான பிரதிபலனைப் பெறும் நோக்கத்தில், குற்றவியல் நீதிமுறை மற்றும் சமூக வளங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரு பிரச்சினை-தீர்க்கும் அணுகுமுறையைக் கையாளும் சமூக குற்றவியல் நீதிமன்றம் 1 ஜூன் 2006 அன்று அமைக்கப்பட்டது. குற்றம் புரிய தயக்கமுறச் செய்வது மற்றும் செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனை வழங்குவது என்ற கொள்கைகளோடு சேர்த்து, மறுவாழ்வு மற்றும் குற்றத் தடுப்பு ஆகிய இரட்டை கொள்கைகளுக்கும் சமூக குற்றவியல் நீதிமன்றம் கடப்பாடுக் கொண்டுள்ளது.

குற்றவாளிகளைக் கையாள பாரம்பரியமற்ற, பல்துறை குழு அணுகுமுறையைப் பயன்படுத்தி, சமூக குற்றவியல் நீதிமன்றம் தண்டனை விதிப்பதில் மாற்று வழிகளையும் மற்றும் சமூக அடிப்படையிலான தடுப்பு நடவடிக்கைகளையும் நீதிமன்ற மதிப்பீடுகளோடு ஆராய்கிறது. இது குற்றச்செயற்பாட்டிற்கு அடிப்படை காரணங்களுக்கு ஒரு பிரச்சினை-தீர்க்கும் அணுகுமுறையை ஊக்குவிக்கிறது. அக்காரணத்திற்காக, குற்றவாளிகள் மீண்டும் குற்றச்செயலில் ஈடுபடும் சாத்தியங்களைக் குறைப்பதற்காக சமூக குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகள், உளவியலாளர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் சமூக அமைப்புகளுடன் இணைந்து குற்றவாளிகளுக்கான சிகிச்சைத் திட்டங்களையும், பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்புத் திட்டங்களையும் உருவாக்குகின்றனர்.

## வழக்கு வகைகள்

சமூக குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு வகைகள்:

> 18 வயதிலிருந்து 21 வயதிற்குக் கீழ் உள்ள குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள்;

> மனநோயால் பாதிக்கப்பட்ட குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்;

> குடும்ப வன்முறை வழக்குகள்;

> விலங்கு வதை மற்றும் துன்புறுத்தல் வழக்குகள்;

> இன உறவுகளைப் பாதிக்கும் வழக்குகள்;

> 65 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய குற்றஞ்சாட்டப்பட்டோர் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்;

> நாள்பட்ட அடிமைப்பழக்க பிரச்சினைகள் கொண்ட குற்றஞ்சாட்டப்பட்டோர் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்; மற்றும்

> கடை திருட்டு வழக்குகள்.

## சமூக குற்றவியல் நீதிமன்ற கூட்டம்

விசாரணைக்கு முந்திய கூட்டத்தின்போது, அல்லது தண்டனை விதிப்பதற்கு முன்பு அல்லது தண்டனை விதிக்கப்பட்ட பிறகு, சமூக குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ஒரு சமூக குற்றவியல் நீதிமன்ற கூட்டத்தை (CCC) அழைக்கலாம். சூழலுக்கு ஏற்ப, CCC, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குடும்பங்கள், குடும்ப வன்முறை வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும், தற்காப்பு வழக்கறிஞர் ஆகியோரை ஈடுபடுத்தும். CCC பின்வரும் சில நோக்கங்களை அடைய முனைகிறது:

> குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மறுபடியும் குற்றம் புரியும் நடத்தைக்கான முக்கிய காரணத்தை மதிப்பிட, எடுத்துக்காட்டாக, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்குக் கடை திருட்டுக்கான முந்தைய குற்றத்தீர்ப்புகளின் வரலாறு உள்ளது. இப்போதும் சமூக குற்றவியல் நீதிமன்றத்தின் முன் உள்ள குற்றச்சாட்டு அதே போன்ற ஒரு குற்றச்செயலுக்காகவே;

> குற்றஞ்சாட்டப்பட்ட நபருடன் (மற்றும் அவரது குடும்பத்தினருடன்) இணைந்து, அவர் மறுபடியும் குற்றச்செயலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கு, அவரது குற்றம் புரியும் நடத்தைக்கான மூல காரணங்களைக் கையாள ஒரு தகுந்த சிகிச்சைத் திட்டத்தை ஆராய்வது;

> (குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு) உடனடி தொடர் நடவடிக்கை, அவசர பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பொருத்தமான முகமைகளுடன், எடுத்துக்காட்டாக, சமூக, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (MSF), சிங்கப்பூர் காவல்துறை மற்றும் குடும்ப சேவை நிலையங்கள் ஆகியவற்றுடன் வளங்களை ஒருங்கிணைத்தல்;

> தண்டனைக்கு முன் மற்றும்/அல்லது தண்டனைக்குப் பின், பொருத்தமான சமூக சேவை அமைப்புகள், MSF மற்றும்/அல்லது சிங்கப்பூர் சிறைச்சாலை சேவையிடம் பரிந்துரைகளைச் செய்ய, எதிர்காலத்தில் மறுபடியும் குற்றச்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க ஆக உகந்த சிகிச்சை மற்றும் பராமரிப்பு திட்டங்கள் நடப்பில் இருப்பதை உறுதிசெய்ய வழக்குகளைத் தொடர்ந்து கையாளுவது;

> வள முகமைகளுடன் தொடர்புகொள்ள, குறிப்பாக, மற்றவற்றிற்கிடையில், சமூக நீதி நிலையம் (CJC), ஒருங்கிணைந்த பராமரிப்பு முகமை (AIC), சிங்கப்பூர் பின்நலச் சேவைச் சங்கம் (SACA), வீ கேர் சமூக சேவைகள் (We Care) மற்றும் ஆகச் சிறந்த மறுவாழ்விற்கு வசதி செய்து தர ஒவ்வொரு வழக்கையும் தொடர்ந்து கையாளுவது;

> சமூகம் சார்ந்த தண்டனை (CBS) தெரிவுகள் குறித்து தெளிவான தகவலைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களிடம் வழங்க, குறிப்பாக, உத்தரவுகளின் நோக்கங்கள் மற்றும் விளைவுகள், CBS-க்கு கீழ்ப்படியாமல் இருந்தால் அதற்குண்டான பின்விளைவுகள் (குறிப்பாக நீதிமன்றம் உத்தரவுகளை இரத்து செய்வது மற்றும் தண்டனையை மறுபடியும் விதிப்பது), அத்துடன் அத்தகைய உத்தரவுகளை மாற்றவும் திருத்தவும் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரம்;

> நீதிமன்றத்தால் உத்தரவிடப்படும் தண்டனைக்கு முந்திய நெறிமுறைக்குக் (CPSP) குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தகுதி பெறுவார்களா என்பதைக் குறித்து முன்னோட்ட சோதனை வழங்க. இத்தண்டனைக்கு முந்திய நெறிமுறையின் கீழ் தண்டனை விதிக்கப்படுவதற்கு முன் தாம் மறுபடியும் குற்றச்செயலில் ஈடுபடுவதற்கு ஆதாரமாக இருக்கும் அடிப்படை பிரச்சினைகளைச், (நாள்பட்ட போதைப்பொருள், மதுபானம் அல்லது சூதாட்ட அடிமைப்பழக்கம் உள்பட) சமாளிக்க குற்றஞ்சாட்டப்பட்டவர் குறிப்பிட்ட காலத்திற்குச் சமூகத்தில் உள்ள திட்டங்களில் கலந்துகொள்வார்.

## நிபுணத்துவ சேவைகளுக்கான மையம்

உயர்தர ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளை வழங்கும் நோக்கத்தில், வழக்குகளை மதிப்பிட, பரிந்துரைக்க நிர்வகிக்க மற்றும் ஒருங்கிணைக்க மனோதத்துவ நிபுணர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் இதர நிர்வாக ஊழியர்கள் அடங்கிய குழு ஒன்று சமூக குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஆதரவளிக்கிறது. அந்தக் குழு நிபுணத்துவ சேவைகளுக்கான மையம் (CSS) என்று அழைக்கப்படுகிறது. வழக்கமாக விதிக்கப்படும் தண்டனைகளான சிறைத்தண்டனை, அபராதம் மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்பு ஆகியவற்றைத் தாண்டி, குற்றவாளிகளின் குற்ற நடத்தைக்கான அடிப்படை காரணங்களுக்குச் சிகிச்சை வழங்கவும் மற்றும் அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடும் வாய்ப்புகளைக் குறைக்கவும் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகள் மற்றும் சிகிச்சை தெரிவுகளை வழங்க CSS சிங்கப்பூரில் உள்ள சமூக அமைப்புகளை ஈடுபடுத்துகிறது. CSS நீதிமன்ற திட்டங்களில் குற்றவாளிகளின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கிறது மற்றும் சமூகத்தில் உள்ள பொருத்தமான உதவி முகமைகள் மற்றும் வளங்களிடம் பரிந்துரை செயவதன் மூலம் அவர்களின் குடும்பத்திற்கு உதவியும் வழங்குகிறது.

## சமூகம் சார்ந்த தண்டனை தெரிவுகள்

சமூகம் சார்ந்த தண்டனை (CBS) தெரிவுகள் அல்லது சமூக உத்தரவுகள் தண்டனை விதிப்பில் கூடுதல் நீக்குப்போக்கை வழங்குவதற்காகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் (அத்தியாயம் 68, 2012 திருத்தப்பட்ட பதிப்பு) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிறு குற்றங்களைக் கையாள்வதில் நீதிமன்றங்களுக்குத் தரவாரியாகப் பிரிக்கப்பட்ட அதிக தண்டனை விதிப்புத் தெரிவுகள் வழங்கப்படுகின்றன. உகந்த வழக்குகளில், சமூக உத்தரவு பிறப்பிக்கப்படும்போது, அந்தக் குற்றத்திற்கான சிறைத்தண்டனை இடைநிறுத்தப்படலாம். ஆனால், குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூக உத்தரவுகளுக்குக் கட்டுப்பட தவறினாலோ அல்லது மறுபடியும் குற்றம் புரிந்து, சமூக உத்தரவுகள் நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டாலோ, இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை நீக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர் அந்தச் சிறைத்தண்டனையை ஏற்றவாறு நிறைவேற்றுவார்.

வரையறுக்கப்பட்ட சட்டமன்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் அரசு நீதிமன்றங்கள் CBS தெரிவுகளைப் பயன்படுத்தலாம். உகந்த வழக்குகளில், CCC-யைக் கூட்டவும் சமூக உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர், தனது சமூக உத்தரவுகளைக் குறிப்பிடப்பட்ட காலக்கட்டத்திற்குள், பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு (மற்றும் இடைப்பட்ட காலத்தில் மறுபடியும் குற்றம் புரியவில்லை என்ற நிலையில்) வெற்றிகரமாக முடித்தால், அவருக்கு குற்றவியல் குற்றத்தீர்ப்புகள் இல்லை என்று கருதப்படும். அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அந்த குற்றத்திற்கான எந்த பதிவும் இல்லை எனக் கருதப்படும்.

CBS தெரிவுகள் இவற்றை உள்ளடக்கும்:

1. **கட்டாயச் சிகிச்சை உத்தரவு (MTO)** — மனநல மருத்துவ நிலையத்தின் வழியாக வழங்கப்படும் MTOs, சிகிச்சையால் பலன்பெறக்கூடிய மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளுக்குச் சிகிச்சை வழங்குகின்றன.

2. **சமூகச் சேவை உத்தரவு (CSO)** — CSO உத்தரவுகள், குற்றவாளிகள் திருந்துவதற்காகவும் அதிகாரம் பெற்ற ஓர் அதிகாரியின் மேற்பார்வையில் சம்பளமில்லாச் சமூகச் சேவை செய்து சமூகத்திற்கு அவர்கள் ஈடுசெய்யவும் விதிக்கப்படலாம்.

3. **பகல் வேளை நேர் வருகை உத்தரவு (DRO)** — சிங்கப்பூர் சிறைச்சாலை சேவையால் நிர்வகிக்கப்படும் DRO உத்தரவுகள், ஒரு குற்றவாளி கண்காணிக்கப்படவும், ஆலோசனை பெறவும், மறுவாழ்வு திட்டங்களில் உட்படுத்தப்படவும் ஒரு பகல் வேலை நிலையத்திற்கு நேர் வருகைபுரிவதை அவசியமாக்குகின்றன.

4. **குறுகிய காலத் தடுப்புக் காவல் உத்தரவு (SDO)** — ஒரு குற்றவாளி 14 நாட்களுக்கு மேற்போகாமல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படலாம்.

## சமூக வளங்கள்/முகமைகள்

CSS க்கு (நிபுணத்துவ சேவைகள் மையத்திற்கு) ஆதரவு வழங்கும் சமூக முகமைகள் மற்றும் வளங்கள்:

> ஒருங்கிணைக்கப்பட்ட பராமரிப்புக்கான முகமை

> சமூக நீதி நிலையம்

> உளவியல் சிகிச்சை நிலையம்

> குடும்ப சேவை நிலையங்கள்

> GEM புதிய ஆரம்பம் நிலையம்

> ஹோப் ஹவுஸ் (Hope House)

> மனநல மருத்துவ நிலையம்

> சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு

> தேசிய அடிமைப்பழக்கங்கள் நிர்வாகச் சேவை

> சிறைச்சாலை குடும்பவள நிலையம்

> சிங்கப்பூர் சமாரியர் சங்கம்

> சிங்கப்பூர் பின்நலச் சேவைச் சங்கம்

> சிங்கப்பூர் சிறுவர்கள் சங்கம்

> வீ கேர் சமூக சேவைகள் (We Care)

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லா பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் **1 மார்ச் 2023** தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg